# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் -3

## தேவனுடைய தெய்வீக திட்டம்

# முப்பெரும் காலப் பிரிவுகள்



## முதலாம் காலப் பிரிவு

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# முப்பெரும் காலப் பிரிவுகள்

# முதலாம் காலப் பிரிவு

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

தேவ திட்டத்தில் கூறப்பட்டுள்ள மூன்று உலகங்களைப் பற்றி சிந்திப்போம். இவ்வுலகில் நடந்துவரும் தீமையான எல்லா நிகழ்ச்சிகளையும் பார்க்கும்போது, மனிதருடைய வாழ்க்கையானது மாயையான இவ்வுலகத்தோடு முடிந்துவிடுமா? அல்லது இவ்வுலக மனுக்குலத்திற்கென ஏதாவது ஒரு எதிர்கால நம்பிக்கைக்குரிய திட்டம் இருக்குமா? என்று எண்ணத்தோன்றும்.

ஒவ்வொரு நாட்டிற்கும், குடும்பத்திற்கும், நிறுவனங்களுக்கும், தனித்தனி மனிதர்களுக்கும் ஒரு நிரந்தர திட்டமுண்டு. அதன்படி அவர்கள் செயல்படுகிறார்கள்.

அவ்வாறு இருக்கும்போது, சர்வ வல்ல தேவனுக்கு ஒரு நிரந்தரமான திட்டம் இருக்காதா, ஆம் நிச்சயமாக உண்டு.

**ஆபகூக் 2:2,3**

'அப்போது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக, நீ தரிசனத்தை எழுதி
அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகைகளிலே தீர்க்கமாக வரை.
குறித்த காலத்திற்கு தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது.
முடிவிலே அது விளங்கும். அது பொய் சொல்லாது. அது தாமதித்தாலும்
அதற்குக் காத்திரு. அது நிச்சயமாய் வரும். அது தாமதிப்பதில்லை"

மேலும்

**ஏசாயா 14:24-27**

'நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும். நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும்.
சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார். யார் அதை வியர்த்தமாக்குவான்?"
என்று தேவன் கூறுகிறார்

ஆகவே அன்பார்ந்தவர்களே, தேவனுடைய இந்தத் திட்டம் என்ன? எவ்வாறு இது நிறைவேறும்? என்பது வேதத்தில் இரகசியமாக இருக்கிறபடியால், சிலர் அறியாமையினால் தேவனுக்கு திட்டம் எதுவும் இல்லை, மனிதனுடைய வாழ்க்கையில் தீமையும் துன்பமுமே நிரந்தரம் எண்றெண்ணுகின்றனர். சிலர் தேவன் இல்லை என்று சொல்லுமளவிற்கு சென்றுவிடுகிறார்கள் (**சங்கீதம் 14:1,3** வாசித்தறியவும்)

ஆனால் இந்த இரகசியமான தேவதிட்டத்தை வேதாகமத்திலிருந்துதானே நாம் கண்டுபிடிக்கவேண்டும். வேதமே நம்முடைய வெளிச்சமாயிருக்கிறதல்லவா.

**ஏசாயா 34:16**

'கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்.
அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்"

இத்திட்டத்தைப் பற்றி நாம் வேதத்தில் சில பின்னணிகளின் மூலம் பொறுமையாக அறிய முற்படலாம். ஆதியில் மனிதனுடைய சிருஷ்டிப்பு தொடங்கி இனிவரும் முடிவில்லாத காலங்கள்வரை மனித வரலாறு மூன்று பெரிய காலப்பிரிவுகளாக தேவ திட்டத்தில் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று பெரும்பிரிவுகளை பவுல் அப்போஸ்தலரும், பேதுரு அப்போஸ்தலரும் மூன்று உலகங்கள் என்று அழைக்கிறார்கள். அப்.பவுல் கூறுகிறார் -

**2கொரிந்தியர் 12:1-4**

'கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன். அவன் பதினாலு வருஷத்துக்கு
முன்னே மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டான்.
அவன் சரீரத்திலிருந்தானோ சரீரத்திற்குப் புறம்பே இருந்தானோ அதை அறியேன்.
தேவன் அறிவார்"

இங்கு தம்மைப்பற்றியே பவுல் பேசியிருக்கிறார். வேதத்தில் தேவனுடைய ஜனங்கள் தங்களை ஒருபோதும் மேன்மைப்படுத்தி பேசவில்லை. மாறாக மூன்றாம் மனிதரைப்பற்றி பேசுவதுபோலவே உள்ளது(உதாரணம்- யோவா 21:20ல் இயேசுவுக்கு அன்பான சீஷனும், இராப்போஜனம் பண்ணுகையில் அவருடைய மார்பிலே சாய்ந்திருந்தவனும் என்று எழுதும்போது, யோவானே அந்த சீஷனாயிருந்தும், தன்னை வெளிப்படுத்தாமல் மேற்கண்டவாறு எழுதுகிறார் - வாசித்தறியவும்)

அன்பானவர்களே, 'அவன் சரீரத்திலிருந்தானோ அல்லது சரீரத்திற்குப் புறம்பே இருந்தானோ அதை அறியேன்" என்று ஏன் சொல்லுகிறாரென்றால், நம் அன்பின் கர்த்தர் அவரை அரேபிய தேசத்திற்கு அழைத்துச்சென்று, தெய்வீகத்திட்டம் முழுவதும் குறித்து தரிசனம் காண்பிக்கும்போது, சாதாரண மனிதனாக இருந்து பார்த்தோமா என்று சொல்லுமளவிற்கு அந்த தரிசனம் அவருக்கு இருந்தது(**கலாத்தியர் 1:12,17** ). அதன்பின்பே அப்போஸ்தலரிடம் சென்றதாக 1:18ல் வாசிக்கிறோம்-

**2கொரிந்தியர் 12:2**

அவன் 'மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டான் "
என்றும், 3ம் வசனத்தில், 'அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு வாக்குக்கு
எட்டாததுமான வார்த்தைகளை கேட்டானென்றும் அறிந்திருக்கிறேன்.

'மூன்றாம் வானம்" என்று சொல்லும்போது அதற்கு முன்பாக இரு வானங்கள் எங்கேயுள்ளது? இவ்வசனத்தின் அடிப்படையில் மூன்றாம் வானம் என்று சொல்லும்போது, சிலர் வானத்தில் சில அடுக்குகள் இருக்குமென்றும், அதில் மூன்றாம் வானம் இருக்கும் என்றும் பிரசங்கிக்கின்றனர். இது சத்தியத்தின்படியான விளக்கமா இதுபற்றி ஆராய்வோம்.
மேலும் அப்,பேதுரு எழுதும்போது,

**2பேது 3:5-7, 13**

வசனம் 5-6ல் 'பூர்வகாலத்தில் அப்போது இருந்த உலகம்" என்றும்,
வசனம் 7ல், 'இப்போதிருக்கிற வானங்களும் பூமியும்" என்றும்

வசனம் 13ல், 'நீதி வாசமாயிருக்கும் புதிய வானமும் புதிய பூமியும்" என்றும் குறிப்பிடுகிறார்.

அப்.பவுலும், அப்பேதுருவும் கூறின வானங்களும் பூமியும் எதைக்குறிக்கிறது என முதலில் நாம் ஆராயவேண்டியது அவசியமாகும். முதலில் வானம் எதைக்குறிக்கிறது என பார்ப்போமா?

வானம் பொதுவாக வேதத்தில் மூன்று அர்த்தங்களைத் தருகிறது. வானம் என்கிற வார்த்தைக்கு ஆங்கிலத்தில் - Heaven என்று தரப்பட்டுள்ளது. ஆனால் அவ்வார்த்தைக்கு 3 அர்த்தங்கள் உண்டு.
1. வானம் - தேவனுடைய இருப்பிடமாகிய பரலோகத்தைக் குறிக்கிறது - சங்கீதம் 102:20(ஆங்கிலத்திலும் பார்க்கவும்)
2. வானம் - இது ஆகாய விரிவைக்குறிக்கிறது (Sky) - சங் 19:1, ஆதி 1:1 இது நாம் பார்க்கும் வானம். இதில் சூரியன், சந்திரன், நட்சத்திரக் கூட்டங்கள் உள்ளடங்கும்.
3. இதற்கான அர்த்தத்தைத் தெளிவாகக் காண்போம்.
இக்கருத்து அநேகருக்குப்புரியாத ஒன்று.

உதாரணமாக, **மத்தேயு 24:35** 'வானமும் பூமியும் ஒழிந்துபோம்"

**எபிரேயர் 12:36, ஆகாய் 2:6** -

இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன்"

இவ்வசனங்களைப் படிக்கின்ற அநேகர், நாம் பார்க்கிற வானமும் பூமியும் இல்லாமற்போய்விடும் என்று நம்புகின்றனர்.இது சத்திய போதனையா? **2தீமோத்தேயு 2:15** ல் அப்பவுல், நாம் வேதத்தை பகுத்துப் போதிக்கிறவர்களாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார். மேலும் வேதத்தில் பூமியைக் குறித்துப் பார்க்கும்போது,

**பிரசங்கி 1:4**

'பூமியோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறது"

**சங்கீதம் 104:5**

'பூமியை ஒருபோதும் நிலைபெயராதபடிக்கு
அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார்"

**ஏசாயா 45:18**

'அதை மனிதக் குடியிருப்புக்காக சிருஷ்டித்தார்"



ஆக நாம் வாழும் பூமியானது, என்றென்றைக்கும் அழியாது என்று இவ்வசனங்கள்கூறுவது, முன்னுக்குப்பின் முரணாக உள்ளதா? அவ்வாறு இருப்பதற்கு வாய்ப்பில்லையே.

தேவனுடைய சிருஷ்டிப்பில் வானத்தில் கோடானுகோடி நட்சத்திரங்கள் உள்ளனவே.அவைகளின் தூரம், அளவு, தன்மையை ஆராயும்போதுவிஞ்ஞானிகளின்கூற்றுப்படி 1500 கோடி நட்சத்திரக் கூட்டங்கள்உள்ளதாக கணிக்கின்றனர். நம்முடைய சூரியக்குடும்பத்தில் ஒவ்வொரு கோளங்களும் ஒன்றுக்கொன்று ஈர்ப்பு சக்தியால் நியதி தவறாமல் இயங்கிவருவதை அறிவோம். இவைகளைப்பற்றி மனிதன் ஓரளவுகூட அறியமுடியாதநிலையில், சர்வ வல்லமையுள்ள தேவன் இவைகளை

அழிப்பதற்காகவா சிருஷ்டித்தார் என உணராமல், இவைகளைஅழித்துவிடுவார் என்று நம்புகின்றனர்.

தேவனுடைய சிருஷ்டிப்பிலே எல்லா சிருஷ்டிகளும் அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, மனிதன்தானே அவருக்கு விரோதமாக நடக்கின்றான். அவ்வாறிருக்க வானமும் பூமியும் அழிக்கப்படவேண்டியதன் அவசியம் என்ன? ஆகவேஅன்பானவர்களே,

**மத்தேயு 24:35** ' வானமும் பூமியும் அழிந்துபோம்"

என்ற அடையாள மொழியிலே(Symbolic) பேசப்பட்டுள்ளது.
எப்படியெனில், வானத்தின் 3ம் அர்த்தம் -

**எபேசியர் 2:2** ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய (பிசாசு)

**எபேசியர் 6:11,12** 'வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள்"

இந்த வானமே நிச்சயம் அழிக்கப்படும். ஆக இந்த வானம் என்பதன் 3வது அடையாள அர்த்தம் என்னவெனில், கண்ணுக்குத்தெரியாத ஆவிக்குரிய அரசாட்சியைக் (Invisible Spiritual rulership) குறிக்கிறது.ஏனெனில் இவ்வுலகம் கண்ணுக்குத்தெரியாத சாத்தானுடைய கட்டுப்பாட்டில் உள்ளதை அனைவரும் அறிந்ததே.

**பூமி என்பதன் அடையாளம் என்ன?**

**ஏசாயா 24:1-3, 19-20** ல் (தேசம் -பூமி ஆங்கிலத்தில் ஒப்பிட்டுப் பார்க்கவும்) கண்ணுக்குத் தெரியும் மனிதரின் ஆளுகையைக் (Visible human rulership)குறிக்கிறது. மனிதரின் இந்த ஆளுகையானது நான்கு அஸ்திவாரங்களின்மேல் உள்ளது.

**1. அரசியல் - அரசாங்கம் 2.சமுதாயம் 3. மதங்கள்**
**4.பொருளாதாரம்(பணம், வியாபாரம்)**

எனவே வானத்திற்கு முதல் இரண்டு உலகில் கொடுக்கப்பட்ட மூன்றாம் அர்த்தம், கண்ணுக்குத் தெரியாத சாத்தானும் அவனைச்சார்ந்த தூதர்களின் ஆவிக்குரிய அரசாட்சியுமேயாகும்.

பூமி என்பது சாத்தானுடைய கட்டுப்பாட்டிலுள்ள மனிதர்கள்மூலம் கண்ணுக்குத் தெரிகிற ஆட்சிஅதிகாரமுறை.இவைகளைத்தான் தேவன் அழிக்கப்போகிறார். ஆனால் மூன்றாம் உலகில் அதே வானம் என்ற கண்ணுக்குத் தெரியாத ஆவிக்குரிய அரசாட்சியில் சாத்தான் நீக்கப்பட்டு, இயேசுவும் அவருடைய சபையும் ஆட்சிபுரிவர். பூமி என்னும் கண்ணுக்குத் தெரிகிற மனிதருடைய அரசாட்சியும், இயேசுவின் கீழ் செயல்படும். மாறாக இயற்கையான வானத்தையும் பூமியையும் இது குறிக்காது.

பவுல் அப்போஸ்தலன் **2கொரிந்தியர் 12:1-4** வசனங்களில் கூறியபடி மூன்றாம் வானம் என்பது மூன்றாம் உலகில்(கிறிஸ்துவின் 1000 ஆண்டு அரசாட்சியில்) நடைபெறவிருக்கும் எல்லா ஆசீர்வாதமான காரியங்களையும் குறித்ததான தரிசனங்களையே அவர் பார்த்தார். மாறாக வானத்தில் மூன்றாம் அடுக்கு என இது பொருள்படாது.

இதுபற்றி இன்னும் விபரமாக மூன்று உலகங்களைப் பற்றிய பின்வரும் வகுப்புக்களில் பார்க்கலாம். ஆகவே அன்பானவர்களே இதன் அடிப்படையில் முதல் உலகம் பற்றி இனி விரிவாகப் பார்ப்போம்

# முதல் உலகம்

மூன்று உலகங்கள் பற்றிய சில முக்கிய அம்சங்களைப் பார்த்தோம். அதில் வானம், பூமி என்பதன் மூன்றாம் அர்த்தமான அடையாளமொழியின் பொருளை அறிந்தோம். வானம் என்பது கண்ணுக்குத் தெரியாத ஆவிக்குரிய அரசாட்சி என்றும், பூமி என்பது கண்ணுக்குத் தெரிகிற மனுஷனுடைய ஆளுகை எனவும் பார்த்தோம்.முதல் உலகத்தில் நடந்த முக்கியமான சிலவற்றை இப்பாடத்தில் பார்ப்போம்.

**எபிரேயர் 2:5**

'இனிவரும் உலகத்தைக் குறித்து பேசுகிறோமே,அதை அவர் தூதர்களுக்கு கீழ்ப்படுத்தவில்லை"

ஆக, முதல் இரண்டு உலகங்களை தூதர்களுக்கு தேவன் அனுமதித்திருந்தார். அதில் முதல் உலகம் ஆதாமின் சிருஷ்டிப்பு முதல் ஜலப்பிரளயம் உண்டாகும்வரை 1656வருடங்களாகும் **(ஆதியாகமம் 7:11)** . இக்காலக்கணக்கை பின்னர் ஆதாரத்துடன் பார்ப்போம்.


ஏன் தேவன் இவ்விரண்டு உலகங்களை தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தினார்? தேவன் ஏதேனில் ஆதாம் ஏவாளை சிருஷ்டித்து அவர்களுக்குஒரு கட்டளை கொடுத்திருந்தார்.

**ஆதியாகமம்2:16,17**

'நீங்கள் தோட்டத்தில் உள்ள எல்லா விருட்சங்களின் கனிகளையும் புசிக்கலாம்.
ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள நன்மை தீமை அறியத்தக்க
கனியைப் புசிக்கவேண்டாம். புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் "

ஆனால் ஆதாம் ஏவாள் அக்கனியைப் புசித்துவிட்டதினால் **ஆதியாகமம் 3:22** ல்,தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். மீண்டும் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்காதபடி தடுத்தார்.

ஏனெனில் ஜீவ விருட்சம் என்பது சாவை எதிர்க்கும் சக்திகொண்டது. சாகவே சாவாய் என்ற தீர்ப்பின்படி, அந்நாளிலிருந்தே சாகத்தொடங்கினான். அந்நாளில் எனும்போது, கர்த்தருக்கு ஒரு நாள் 1000 வருடம்போலவும், 1000வருடம் ஒரு நாள் போலவும் இருக்கிறது என **2பேதுரு 3:8** ல் அறிகிறோம். ஆகவேதான், முதல் உலக மனிதர்கள் 1000 வருடத்திற்கு முன்பே மரித்துவிட்டனர். ஆக அந்நாளிலே சாகவே சாவாய் என்பது மனிதன் கடைப்பிடித்துவரும் 24மணிநேர நாள் அல்ல. மாறாக கர்த்தரின் 1நாளாகிய 1000 வருடம் என அறிவது அவசியமாகும். அதிக வருடமாக மெத்துசேலா 969வருடங்கள், யாரேத் 962வருடங்கள், நோவா 950 வருடங்கள், ஆதாம் 930 வருடங்கள் உயிர்வாழ்ந்தனர்.எவ்வாறு இவர்கள் இத்தனை வருடங்கள்உயிரோடு இருந்தனர்? தற்போது நாம் 50 வருடத்திலேயே வயதானவர்கள் ஆகிவிடுகிறோமே.




எப்படியெனில், **2பேதுரு 3:5** இலும், **ஆதியாகமம்1:6** இலும் பூர்வ உலகத்தில் தேவனுடைய சிருஷ்டிப்பில் 2ம் நாளிலே ஜலத்தினின்று ஜலத்தைப் பிரித்து ஆகாயவிரிவுக்கு மேலும் (above the sky)ஆகாய விரிவுக்கு கீழேயும் (on the earth)வைத்தார்.

சூரியனுடைய வெப்பம் பூமியைத் தகிக்காமல் தடுக்க, அநேக தண்ணீர் அடுக்குகளை பூமியைச் சுற்றிலும் வைத்தார். அதை ஆங்கிலத்தில் Water Canopy என்று அழைக்கிறோம். இப்படியாக

முதலாம் உலகம் முழுவதும் இதமான சீதோஷண நிலைநிலவியது(air conditioned earth). மேலும் குளிர்சாதனப் பெட்டியில் பொருட்கள் வைத்தால் அநேக நாட்கள் கெடாமல் இருக்கிறதோ, அதுபோல முதலாம் உலகம் முழுவதும் இருந்தது. அவ்வுலகத்தில் காற்றாடிகளோ அல்லது குளிர்சாதன வசதிகளோ அல்லது வெப்ப உடைகளோ தேவையில்லாமல் இருந்தது. அதினால் மனிதர்கள் அநேக வருடங்கள் உயிரோடு இருக்கமுடிந்தது. இவ்வாறிருக்கும்போது,

**ஆதியாகமம் 6:3**

’அப்போது கர்த்தர், என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை. அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார்”

இங்கு கூறப்பட்ட 120 வருடம் மனிதனுடைய ஆயுசு நாட்களைப்பற்றி பேசுவதாக அநேகர் தவறாக நினைக்கின்றனர். ஆனால் முதல் உலகின் மனிதர்கள் 900,800,700 வருடங்களும், 2ம் உலகத்தில்கூட ஆதியாகமம் 5ம் அதிகாரத்தில் 500,400,300 , 200 வருடங்கள் மனிதர்கள் உயிரோடு இருந்திருக்கின்றனர். ஆக, இங்கு கூறப்பட்ட 120 வருடம் - முதல் உலகின் ஒட்டுமொத்த ஜனங்களின் ஆயுசு நாட்களையே தேவன் குறிப்பிடுகிறார். எவ்வாறெனில், ஜலப்பிரளயத்தினால் ஏற்படும் அழிவிற்கு120 வருடத்திற்கு முன் தீர்க்கதரிசனமாக தேவன் முன்னறிவித்த வசனமே இக்காலமாகும். அதையே நோவா 120 வருடம் பேழை கட்டும் நாட்களாக நாம் எடுத்துக்கொள்ளலாம்.

அன்பானவர்களே, ஏன் தேவன் இந்த அருமையான முதல் உலகத்தை அழிக்க முற்படுகிறார்? கவனமாக இதை ஆராயவேண்டும்.

**2பேதுரு 2:4**

‘பாவஞ்செய்த தூதர்களை தப்பவிடாமல் அந்தகாரச் சங்கிலிகளினால் கட்டி, நரகத்திலே தள்ளி..”

யார் இந்த பாவம் செய்த தூதர்கள் என்று நாம் பார்க்கும்போது,

**ஆதியாகமம் 6:1-4** ல், மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவக்கி அவர்களுக்கு குமாரத்திகள் பிறந்தபோது,தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தர்யம் உள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்கு பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்.

வசனம் 4ல், ‘அந்நாட்களில் இராட்சஷர் பூமியில் இருந்தார்கள். தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால்,இவர்கள் அவர்களுக்கு பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்”



மேற்கண்ட வசனங்களில் தேவகுமாரர் என்று சொல்லும்போது, அது தேவதூதர்களைக் குறிக்கிறது(உ.ம் **யோபு1:6**ல் தேவபுத்திரர் ,**யோபு 38:7** ல் தேவபுத்திரர்)

தேவதூதர்கள் மனுஷகுமாரத்திகளை திருமணம் செய்துகொள்ளமுடியுமா? நமது கர்த்தர் கூறும்போது,

**மத்தேயு22:29,30**

‘உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை.

அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள்"
என்கிறார். மனிதனின் சிருஷ்டிப்பைப் பற்றி வேதாகமத்தில்

**சங்கீதம்8:5**

'நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்" .



ஆகவே தேவதூதர் மனிதனைவிட சற்று பலத்திலும் அறிவிலும் சிருஷ்டியிலும் மேலானவர்கள்.

தேவதூதருடைய சுபாவம் ஆவிக்குரிய கண்ணுக்குத் தெரியாத சிருஷ்டியாக இருந்தாலும்கூட( **சங்கீதம் 104:4** ). மனிதர் அவர்களைப் பார்க்கவேண்டுமானால் அல்லது தேவனுடைய செய்தியை மனிதனுக்குத் தெரிவிக்க, மனிதனைப்போன்றே தோன்ற வேண்டுமல்லவா, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணி நிறைவடைந்தபின், ஆவியின் சரீரம் எடுத்து பரலோகம் சென்றுவிடலாம். உதாரணமாக, ஆபிரகாமினிடத்தில் 3 தேவதூதர்கள் வந்து, அவரிடத்தில்தங்கி, மாம்ச உணவை உண்டு, பின்னர் இரண்டு தூதர்களும் சோதோம், கொமாரா சென்றார்களே**ஆதி 18:2,19:1** ).

**ஆதியாகமம் 32:24, ஓசியா 12:4**

'யாக்கோபு ஒரு புருஷனாகிய தேவதூதரிடம் (மனிதன்போன்று)
போராடி மேற்கொண்டாரே"

நடந்தது என்னவென்றால் , ஆதாமின் சந்ததி பாவத்தில் விழுந்துபோனபின், தேவனுடைய பரிசுத்த தூதர்கள் மனிதர்மேல் இரக்கங்கொண்டு அவர்களை நல்வழிப்படுத்த தேவனின் அனுமதி கிடைத்து, இப்பூமியில் வந்தபோது, ஏற்கனவே பூமியில் மனுக்குலத்தை விழச்செய்த சாத்தான் இவர்களை வஞ்சகம்செய்து மக்களை நல்வழிப்படுத்தலாம் எனக்கூறி, மாம்ச தேகத்தில் இவர்கள் பூமியில் இருந்தபோது, பூமியின் ஸ்திரீகள் அதிக சௌந்தர்யமுள்ளவர்களெனக் கண்டு அவர்களுக்குள்ளே பெண்களைத் தேடிக்கொண்டு, தேவ சித்தத்திற்கு விரோதமான ஒரு சந்ததியை அதாவது இராட்சதர்களை பிறப்பித்துவிட்டார்கள். இவர்கள் தேவதூதருக்கும் மனுஷருக்கும் பிறந்த இடைப்பட்ட சந்ததியார் ஆவர். மேலும் இவர்கள் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள். மேலும் இவர்கள் துன்மார்க்கமான சிந்தனை உள்ளவர்களாக இருந்தனர்.

உருவத்தில் சாதாரண மனிதரைவிட அதிக உயரம், வலிமை உடையவர்களாய் இருந்தனர். இப்போதும்கூட கிரேக்க இந்திய மற்றும் ஜப்பானிய எல்லா புராணங்களிலும் இவர்களைப்பற்றி பேசப்பட்டும் உயரமான உருவம், கைகளில் சுத்தி, அரிவாள் போன்ற சிலைகள் வைக்கப்பட்டும் வழிபடுகின்றனர்.

**ஆதியாகமம் 6:11,12**

'பூமியானது தேவனுக்கு முன்பாக சீர்கெட்டதாயிருந்தது.
மாம்சமான யாவரும் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்"

ஆகவேதான், தேவன்


**ஆதியாகமம்6:3**

'அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம்" .

மனிதர்களுடைய பாவம் அதிகரித்து, தேவனைவிட்டு வெகுதூரம் சென்றுவிடாதபடி தம்முடைய நீதியினாலும், அன்பினாலும் முதல் உலகத்தின் எல்லா ஜீவன்களையும் ஜலப்பிரளயத்தினால் அழிக்க முடிவுசெய்தார். இவ்விதமாக தண்ணீரில் அழிவதும்கூட ஜீவன்களுக்கு அதிக வேதனை தராத மரணமாக அமைந்தது.

**2பேதுரு 2:5**

'பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல் நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுபேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி.."



இங்கு நோவா எவ்விதம் நீதியைப் பிரசங்கித்தார்? பிரசங்கம் இரண்டு வகைப்படும்.

1. வார்த்தையினால் பிரசங்கிப்பது
2. செயலின்மூலம் பிரசங்கிப்பது

இங்கு நோவா இரண்டுவகையிலும் பிரசங்கித்தார்.
தேவன்பேரில் விசுவாசம் , கீழ்ப்படிதல்(ஆதியாகமம் 6:2) காரணமாக கற்பனைக்கெட்டாத அளவுள்ள அந்தப் பேழையை(அக்காலத்தில் எவ்வித வசதியுமில்லாத நிலையில்) பொறுமையோடு செய்துமுடித்தார்.
நீளம் 450அடி(300முழம்), அகலம்75அடி(50முழம்), உயரம்45அடி(30 முழம்). அதாவது, இப்போது உள்ள ஒரு கால்பந்து மைதான அளவுக்குமேல் இருக்கும். பேழை கட்டக்கட்ட உயரம் அதிகரிக்க அதிகரிக்க, ஜனங்கள் எல்லா இடங்களிலுமிருந்து வந்துபார்த்து, நோவாவை மனமடிவடையச் செய்திருப்பார்கள்.

மேலும் பேழை கட்டி முடிக்கப்பட்டு, தேவன் நோவாவையும் அவர் குடும்பத்தாரையும் பேழைக்குள் அனுப்பி, ஏழு நாட்கள்(ஆதியாகமம் 7:10) காத்திருக்கச்செய்தபோதும், ஜனங்கள் எந்த அளவுக்கு கிண்டல் செய்திருப்பார்கள் என யோசிக்கவேண்டும். நோவாவுக்கே ஒருவேளை மனக்கஷ்டம் வந்திருக்கவேண்டும். இன்று நாம்கூட கிறிஸ்துவின்மேல் விசுவாசம்வைத்து விசுவாசக்கப்பல் கட்டிக்கொண்டிருக்கிறோமே- 1தீமோத்தேயு1:19ஐ ஒப்பிட்டுப்பார்க்கவும். ஏனெனில் பூமியின்மேல் தேவன் மழையை இதுவரை பெய்யப் பண்ணவில்லை.ஆகவே மழை வருகிறது என்று நோவா கூறும்போது, ஜனங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. **ஆதியாகமம் 2:5,6**இல் வாசிக்கவும். ஆனால் நோவா தேவன்மேல் உறுதியான விசுவாசம் வைத்திருந்தார்.

இப்போது நோவாவுக்கு 600 வயதாகும் வருஷம் 2ம் மாதம் 17ம்தேதி, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களும், வானத்தின் மதகுகள் அல்லது தண்ணீர் அடுக்குகள் திறவுண்டு, 40 நாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது.**ஆதியாகமம் 7:11,12,20** இல், மூடப்பட்ட மலைகளுக்கு மேலாய் 15 முழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று. பூமியின்மேல் ஜலம் 1வருடம் 10 நாட்கள் இருந்தது(ஆதியாகமம்8:14) . இராட்சதர்கள் உட்பட அனைத்து ஜீவன்களும் மரித்தன. 1வருடம் 10 நாள் நோவா பேழைக்குள் அடைந்த துன்பத்தை யோசிக்கவும். ஆனால் மனித

சுபாவத்தில் இருந்த தேவதூதர்கள் தங்கள் உண்மை சுபாவமான ஆவியின் சுபாவத்திற்கு மாறி தப்பிக்க முயன்றபோது, தேவன் இவர்களை பரலோகம் வரவிடாமல் ஆகாய மண்டலத்தில் சிறைவைத்தார்.

**2பேதுரு 2:4**

'பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல் அந்தகார சங்கிலிகளால் கட்டி, நரகத்திலே தள்ளி, நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக"

இங்கு கூறப்பட்ட நரகம் என்கிறவார்த்தை கிரேக்க பாஷையில் டார்டரு என்ற சொல்லாகும். இந்த ஒரே இடத்தில்தான் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பதத்திற்கு பாதாளம்- ஆழத்தை அளக்கமுடியாத இடம் என்று பொருள். அதாவது பரலோகமாகிய உன்னதமான இடத்திலிருந்து ஆகாயவிரிவு என்பது தூதர்களுக்கு பாதாளமாக இருந்திருக்கிறது(வசனம் **எபேசியர்2:2** இல் சாத்தான் ஆகாயத்து அதிகாரப்பிரபு, **எபேசியர்6:12** இல் , வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவி) ஆனால் நமக்கு பாதாளம் என்பது பூமியின் கீழுள்ள கல்லறையைக் குறிக்கிறது. யூதா6ல் வாசிக்கலாம்.

இவ்வாறாக தேவன்அவர்களைஅழிக்காமல், இரண்டாம் உலகத் துவக்கம்வரை ஆளுகை செய்யும்படி அனுமதித்தார்(அப்போஸ்தலர்7:42). இரண்டாம் உலகம் நோவாவும் அவர் குடும்பத்தார் 8பேரைக்கொண்டுஆரம்பித்தது. இரண்டாம் உலகத்தைக்குறித்து வரும் பாடத்தில் பார்க்கலாம்.



**தேவனுடைய கிருபை நம் அனவரோடும் கூட இருப்பதாக ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/